## கூட்டுறவு மிகை நிதியம் - 2015

கூட்டுறவு மிகை நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின், கூட்டுறவு மிகை நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 01**

நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 07**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் தேறிய பெறுமதி பூச்சியமாக பதிவுசெய்யப்பட்டிருந்த ரூபா 1,840,569 கிரயமான கணனி மற்றும் அச்சீட்டு இயந்திரங்கள் செயற்பாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு வகைப்படுத்தப்பட்டதா என்பது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் பயன்பாட்டில் இல்லாத ரூபா 189,001 கிரயமான கணனி மென்பொருள் ஐந்தொகையில் கற்பனைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 507,671,763 தொகையான கடனுக்காக ஐயக்கடன் ஒதுக்கீடு ரூபா 1,349,763 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை நுகர்வோர் சங்கத்திற்கு வழங்கப்பட்ட கடனை திருப்பிச் செலுத்துவதற்காக பிணைக்கு வைக்கப்பட்டிருந்த நிலையான வைப்பினை இரத்துச் செய்யும் போது 2014 சனவரி 01 முதல் 2014 மார்ச் 06 வரை காலப்பகுதிக்குரிய வட்டி ரூபா 207,296 தொகை வங்கி நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், அது மேலும் கிடைக்க வேண்டிய மீதியொன்றாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நானாவித கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த கூட்டுறவுச் சங்க கடன் மீதி பேரேடு மற்றும் அட்டவணையுடன் ஒப்பிடும் போது ரூபா 86,662,204 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் கீழ் திரண்ட நிதியத்தில் சீராக்கமாக ரூபா 10,353,918 தொகை பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அது காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்ட முறை தெளிவுபடுத்தப்படவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் 5 ஆம் குறிப்பின் பிரகாரம் மற்றும் பட்டோலை 1 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் கிரயத்தில் ரூபா 164,157 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 தொங்கல் கணக்கு

தொங்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்ட 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 6,041 தொகையான மீதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்களின் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| **கணக்கு விபரம்** | **பெறுமதி** | **கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்** |
|---|---|---|
| | **ரூபா** | |
| கூட்டுறவுச் சங்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் வட்டி | 573,120,858 | மீதி உறுதிப்படுத்தல் |
| கூட்டுறவு நிதியத்திலிருந்து பெறவேண்டிய கடன் | 5,029,486 | |
| பொது வைப்புக் கணக்கு | 2,645,004 | பொது வைப்பு பேரேடு |
| நிலையான வைப்பு பிணைக் கடன் | 99,049,481 | கடன் கோவைகளும் மீதி உறுதிப்படுத்தல்களும் |
| மதிப்பிழந்த காசோலை | 768,971 | மதிப்பிழந்த காசோலை பதிவேடு / வங்கிக் கூற்று |
| கலைப்புக் கணக்கு | 2,620,473 | தயாரிக்கப்பட்ட கலைப்புக் கணக்கின் பிரதி |
| செலுத்த வேண்டிய திறைசேரி நிதியம் | 150,000 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் பட்டோலைகள் |
| செலுத்த வேண்டிய தேசிய நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 3,871,256 | |
| | 687,255,529 | |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் வட்டி ரூபா 81,871,370 மற்றும் மிகை நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,017,550 தொகை 04 ஆண்டு காலமாகவும், ரூபா 1,020,235 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய 05 பொறுப்புக் கணக்கு மீதிகள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் தீர்வு செய்யப்படாமல் காணப்பட்டன.

(ஆ) வ/ப இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்க சமாஜத்திற்கு 1992 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 143,919,037 ஆன கடன் தொகையில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 119,027,924 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் சமாஜத்திற்கு 04 கோப் சிட்டி சுபிரி சந்தைகளை ஆரம்பிப்பதற்காக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 12,000,000 கடன்தொகையில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 3,786,400 ஆன கடன் தவணை மற்றும் அதற்குரிய ரூபா 1,517,520 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 ஆம் ஆண்டின் போது வ.ப இலங்கை கூட்டுறவுச் விற்பனைச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 19,550,000 ஆன கடன்தொகை மற்றும் இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கையேற்கப்பட்ட வ.ப இறப்பர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,600,000 ஆன கடன்தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வ/ப குருணாகல் கூட்டுறவு ஆரோக்யசாலா சங்கத்திற்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2012 செப்தம்பர் 26 ஆந் திகதி ரூபா 100,000,000 ஆன கடன்தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், 2015 செப்தம்பர் 26 ஆம் திகதி அளவில் கடன்தொகை செலுத்தி முடிக்க வேண்டிய போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கடன் தவணை அல்லது வட்டியாக ரூபா 1,000,000 தொகை மாத்திரம் கிடைத்திருந்தது.

(உ) வ/ப நிக்கவரட்டிய கூட்டுறவு அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2014 சனவரி 17 ஆந் திகதி ரூபா 4,000,000 ஆன வட்டியில்லாமல் கடன்தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. நிர்மாண ஒப்பந்தத்தை 03 மாதங்களில் பூர்த்திசெய்து கிடைக்கும் வருமானத்தில் அல்லது கூட்டுறவுச் சங்கத்திற்கு கிடைக்கும் சேரும் பணம் ஆகிய இரண்டில் முதலில் கிடைக்கும் பணத்தில் ஒரே தடவையில் கடன்பணத்தை செலுத்தி விடுவிக்கப்படுவதாக கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,300,000 ஆன கடன் மீதிமேலும் அறவிடப்பட வேண்டியுள்ளது.

(ஊ) வ/ப காலி கூட்டுறவு ஆரோக்யசாலா சங்கத்தின் வைத்தியசாலை நிர்மாணிப்பதற்காக 2013 ஏப்ரல் 03 ஆந் திகதி ரூபா 50,000,000 ஆன கடன்தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ஓராண்டு கழிவதற்கு முன்னர் இக் கடன்தொகை மீள அறவிடப்பட வேண்டிய போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு தவணை பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த தவணைகளும் கிடைக்கப்பெறாதிருந்ததுடன் பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) கொபைகனே கூட்டுறவுச் சங்கத்திற்குரிய எரிபொருள் நிலையமொனறை நவீனமயப்படுத்துதற்காக 2013 ஏப்ரல் 05 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 10,000,000 ஆன கடன்தொகையில் உடன்படிக்கையின் பிரகாரம், 2014 ஏப்ரல் முதல் 2015 திசெம்பர் வரை ரூபா 4,374,999 ஆன கடன் தவணை பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், ரூபா 1,104,510 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 3,270,489 ஆன நிலுவை தவணைப் பணம் அறவிடப்பட வேண்டியிருக்கையில் 2014 ஒக்தோபர் 10 ஆந் திகதி மீண்டும் இச்செயற்பாட்டிற்காக ரூபா 7,000,000 ஆன கடன்தொகை வழங்கப்பட்டிருந்தது. இக்கடன் தொகையில் மாதாந்தம் ரூபா 150,000 தவணை பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 368,170 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஏ) வ/ப நிக்கவரட்டிய கூட்டுறவு அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கு மோட்டர் கிரேடரொன்றை கொள்வனவு செய்வதற்காக 2013 சனவரி 31 ஆந் திகதி ரூபா 19,500,000 ஆன கடன்தொகையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட வேண்டிய கடன் தவணை தொகை ரூபா 6,175,000 ஆக இருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,300,000 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அக்கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டதால் எதிர்பார்க்கப்பட்ட நாளாந்த இலாபம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு 03 மாதங்களுக்கு ஒருமுறை கூட்டுறவு திணைக்களத்திற்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கடிதகோவைகளின் பிரகாரம் அவ்வாறான அறிக்கையொன்று கிடைத்திருக்கவில்லை.

(ஐ) தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் கேட்போர்கூட கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் நவீனமயப்படுத்துவதற்கும் 2014 நவம்பர் 10 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 25,000,000 ஆன கடன் தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் இருந்ததுடன், அக்கடன்தொகை முழுமையாக அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஒ) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் செயற்படாத சங்கங்களாக இனங்காணப்பட்டிருந்த 12 சங்கங்களுக்கு 1990 முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த கடன்தொகையிலிருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 22,354,358 ஆன கடன் மீதி அறவிடப்படாமல் இருந்ததுடன் அதற்காக கிடைக்க வேண்டிய வட்டி தொகையின் கூட்டுத்தொகை ரூபா 8,728,473 ஆக இருந்தது.

(ஓ) 2011 ஆம் ஆண்டின் போது கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 45,500,000 கடன்தொகையிலிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 40,000,000 ஆன கடன் மீதி அறவிடப் வேண்டியிருந்தது.

(ஓ) 2006 ஆம் ஆண்டில் திறைசேரி நிதிய கணக்குகள் கலைக்கப்பட்டதன் பின்னர் கூட்டுறவு மிகை நிதியத்திற்கு கையளிக்கப்பட்ட ரூபா 15,880,475 தொகையான 05 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகள் 09 வருடங்கள் கடந்திருந்த போதிலும், தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமைகள்

---

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு கணக்காண்டு முடிவடைந்த 02 மாதங்களிற்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையுடன் திரட்டிய நிதியத்தின் மாற்றங்களைக் காண்பிக்கும்

கூற்றொன்று அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கான பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 89,477,486 மிகையொன்றானதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் ரூபா 40,735,573 மிகையாக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 48,741,913 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. கூட்டுறவு சங்க கடன் வட்டி வருமானம் ரூபா 16,716,069 ஆல் அதிகரித்தமை மற்றும் நன்கொடை வழங்குதல், பெறுமானத்தேய்வு, ஏனைய செலவினங்கள் மற்றும் ஐயக்கடன் என்பன ரூபா 14,911,506 ஆல் குறைவடைந்திருந்தமை மேற்குறித்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1974 சனவரி 10 ஆந் திகதிய 93/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட கூட்டுறவு சட்ட விதிகளில் 44 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திலிருந்து பணத்தை பதிவாளரால் பின்வரும் செயற்பாடுகளுக்காக பயன்படுத்த முடியும்.

(அ) எந்தவொரு பதிவுசெய்யப்பட்ட ஆரம்ப சங்கமொன்றின் பங்குகளை விலைக்கு கொள்வனவு செய்தலும், பதிவாளர் நிர்ணயிக்கின்ற ஏனைய முறையிலோ அல்லது அவ்வாறான சங்கமொன்றுக்கு உதவியளித்தல்.

(ஆ) மிகையொன்று ஏற்பட்டுள்ள மாவட்டத்தில் அமைந்துள்ள பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றிற்கு எவையேனும் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு நன்கொடை வழங்குதல்.

(இ) கலைப்பாளருக்கு எதிராக உள்ள சிவில் வழக்கொன்றின் போது அவரின் விடுவிப்பிற்கு செயற்படுதலும் அவருக்கு நன்கொடை வழங்குதலும்.

(ஈ) கூட்டுறவு சங்க சட்டத்தின் 3(1)(இ) மற்றும் (ஈ) பிரிவுகளின் பிரகாரம் உருவாக்கப்பட்ட எந்தவொரு பதிவுசெய்யப்பட்ட சங்கங்களுக்கு நன்கொடை வழங்கும் செயற்பாடுகளுக்காக தாபிக்கப்பட்டுள்ள ஏனைய நிறுவனத்திற்கு நன்கொடை வழங்குதல்.

விதியின் பிரகாரம் கூட்டுறவு மிகை நிதியத்திலிருந்து கடன்களை கூட்டுறவு சங்கங்களுக்கு மாத்திரமே வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 2013 ஆம் ஆண்டின் போது கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு 16 சதவீத வட்டி வீதத்தில் 08 தவணைகளில் செலுத்த பூர்த்தி செய்யும் அடிப்படையில் ரூபா 75,000,000 ஆன கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. கடனை திருப்பிச் செலுத்தும் நிதிரீதியான சாத்தியம் தொடர்பாக கருத்திற்கொள்ளாமல் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 52,249,999 அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை நிலையான வைப்புக்கள் முதிர்வடையும் சந்தர்ப்பத்தில் கிடைக்கப் பெறும் வட்டி வருமானத்திலிருந்து வங்கியால் அறவிடப்பட்ட ரூபா 848,851 ஆன நிறுத்தி வைத்தல் வரி, நிதிக்கூற்றுக்களில் நானாவித கடன்பட்டோரின் கீழ் பெறவேண்டிய நிலையான வைப்புக்கள் நிறுத்தி வரியாக காண்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது அதில் ரூபா 452,004 தொகை வங்கியால் மீளச் செலுத்தப்பட்டிருந்ததுடன், மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 396,847 தொகையை அறவிடுவது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபா 771,817,006 தொகை கடனாக வழங்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக திணைக்களத்தின் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான மட்டத்தில் காணப்பட்ட காரணத்தினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 594,333,967 தொகை அதாவது வழங்கப்பட்ட கடன்தொகையிலிருந்து 77 சதவீதமான அளவுகள் அறவிடப்பட வேண்டியிருந்தது. இக்கடனுக்கான வட்டி ரூபா 168,087,855 ஆக இருந்தது.

(இ) 1991 ஆம் ஆண்டிலிருந்து 2 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,500,000 ஆன கடன் தொகையில் வ/ப மத்திய மாகாண பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கபப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 ந் திகதி வரை எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் அச்சங்கம் செயற்பாடற்ற சங்கமொன்றாக இருந்தமை கண்டறியப்பட்டிருந்ததுடன் அறவிடப்பட வேண்டிய கடன் மீதியாக கணக்குகளில் ரூபா 150,000 தெகையே காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வ/ப உடபலாத்த ப.நோ.கூ சங்கத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 2,470,000 ஆக இருந்ததுடன், அச்சங்கம் தற்போது கலைக்கப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதால் அக்கடனை அறவிடுவதில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்டது.

(உ) வ/ப நொச்சியாகம மற்றும் வ/ப ஹொரவப்பத்தான ப.நோ.கூ. சங்கங்கள் கலைக்கப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதால் இந்த இரண்டு சங்கங்களுக்காக வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 241,666 மற்றும் ரூபா 1,000,000 தொகையான கடன் மீதியை அறவிடுவதில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்டது.

(ஊ) வ/ப இலங்கை கோழி வளர்ப்பாளர்களின் கூட்டுறவு சங்க சமாஜத்தின் பதிவு 2003 ஆம் ஆண்டின் போது இரத்துச் செய்யப்பட்டு கலைக்கப்பட்டுள்ளதாக கலைப்பாளர் நியமிக்கப்பட்டு 12 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், கலைத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இச்சங்கத்திற்கு நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட கடன்தொகையிலிருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 100,000 மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் அதற்காக கிடைக்க வேண்டிய வட்டியான ரூபா 172,500 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மனித வளங்கள் கூட்டுறவுச் சங்கத்தின் கலைத்தல் நடவடிக்கைகள் காரணமாக 2007 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை பல சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த நிர்வாகச் செலவினம், தீர்ப்பாளர் கட்டணம், சட்ட செலவினம், பிரயாணச் செலவினம், உபசரிப்பு, கூட்டங்கள் மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காகவும் 2010 ஆம் ஆண்டில் வைப்புக்களை விடுவிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 56,901,825 தொகை ஒவ்வொரு ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துக்களின் பெறவேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலம் மிகை நிதியத்திற்குரிய கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கப் பதிவாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | நாட்குறிப்பு பதிவுகளை தயாரித்தலும் அங்கீகரிக்கப்படாமையும் முறைப்படி மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் முறையாக பேணப்படாமை |
| (இ) கடன் கட்டுப்பாடு | (i) கூட்டறவுச் சங்கங்களின் நிதி இயலுமையை பரீட்சிக்காமல் கடன் வழங்கல் |
| | (ii) கடன் வழங்கும் போது உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாமை காரணமாக கடனை அறவிடுவதில் சிக்கல்கள் தோன்றியிருந்தமை |
| | (iii) வழங்கப்பட்ட கடன் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய பின்தொடர் நடவடிக்கைகளில் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை |